பிசுமில்லாகி.

இப்புத்தகத்தில்

நபியுல்லாபேரில்முன்னோர்கள்பாடிய

காசிம்மாலை

இமாம்காசிம்படைப்போர்

இவைகள் அடங்கியிருக்கின்றன.

இதனை

குலசேகரம்பட்டணம்

சர்க்கரை சாகிபுத்தம்பி யவர்கள் குமாரர்.

அல்லாபிச்சைப்புலவர்

அவர்களால்

இலக்கணவிலக்கிய வழுவின்றிப் பிழையறத்திருத்தி

இராமநாதபுரம் இரவுண்ஷர்ப்புக்கடை-ப-வெ.

முகம்மது இபுறுகிம்சாகிபு

திருநெல்வேலிப்பேட்டை பரிமளகாரவீதி

ச-ஆ.கம்மாவுத்தர்

இவர்கள்முயற்சியால்

மார்க்கபுரம்

முத்துசெட்டியாரது

ஸ்ரீசவிரஞ்சநிமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

ஹிஜுறத்து ௧௨௱௯௰௩ ௵ றபீவுல்ஆகிறு மீ

பிசுமில்லாகிற்றகுமானிற்றகீம்.

இஃது

முன்னோர்கள்பாடிய

காசிம்மாலை.

காப்பு - வெண்பா.

கத்தாவையோதிக் கருத்தினுறவே நினைந்து
வித்தாரமான விரிகடலார் - முத்தாரம்
வீசுமாலைப்புயஞ்சேர் வேதாமபனாப்பாடுங்
காசிமாலைக்கிறையே காப்பு.

கட்டளைக்கலித்துறை.

சீர்கொண்டமேவிய மாருதுஞ்செல்வர் சிறப்பழகுங்
கார்கொண்டமேகக் குடை[illegible]ஞானக் கருத்துங்கண்டு
நேர்கொண்டசொக்கத்தி னெங்காலு[illegible]பா னிறைந்திலங்கும்
வார்கொண்டகொங்கை மடவார்கள் [illegible] முகம்மதுவே. (௧)

அருந்திறலண்ண லபூபக்கர்நீதி யடலுமரு
பெருந்திறல்வேதத் துதுமானலிப்புலி பேசுஞ்சிங்கம்
பொருந்திறல்வீரத் தசனுசைனரும [illegible]வல்ல
வருந்திறல்வீரமு மாண்மையுமுள்ள முகம்மதுவே. (௨)

குருப்பாதமாமலர் மண்மேற்படாமல் குதாயருளாற்
செருப்போடறுகினி லேறிச்சென்றேசிந்தை கூடவந்து
கருப்பாறுபாய விளையுஞ்செஞ்சாலிக் கமழுமுழு
மருப்பாறுபாயுந் தடமக்கம்வாழு முகம்மதுவே (௩)

பூரித்தடவயற் சங்கீன்றமுத்துப் புனைந்தகதிர்
பாரித்திலங்க நிலவுக்கொப்பாயதைப் பார்த்துவரால்
வேரிக்கமுகி னிளம்பாளைசிந்த வெகுண்டெழுந்து
வாரிப்பகடு குதிபாயுமக்க முகம்மதுவே. (௪)

சிங்கத்தின்சிங்கப் புலியலியாருந் திசைகளுள்ள
சங்கைக்குழாமதுந் தார்ப்படைவீரருந் தானெருங்க
வெங்கட்கருடக் கல்யாணவாசலின் வீசுகடல்
வங்கத்திலேறிமன் சக்கனைவென்ற முகம்மதுவே. (௫)

ஆணிக்க[illegible]லங்காரமாகவு மைமாதொருத்தும்
பேணித்தொழுது நெறியாகவேபெரும பூதலத்திற்
பூணிக்கவாழ்ந்து சலவாத்னைதயோதிப் புகழ்ந்தவர்க்கு
மாணிக்கமேழுத்து மக்காவில்வாழு முகம்மதுவே. (௬)

சோமன்மீறுங் குபிர்க்காட்டைவெட்டித் திருக்கருத்துப
பாராமன்மிக்க துனியாவின்[illegible]கவப் பற்றுத்தீர்த்துப்
போமல்வானின் மிகுறுஜிக்கேகயிற் பின்வருங்கல்
வாராமணில்லெனக் கையாலமர்த்து முகம்மதுவே. (௭)

பாய்நீரைக்கொண்ட இளைகடற்போன்ற படையினின்று
மானீரெனச்சொரி யுங்கருதார்களின் வானிபட்டுச்
சேய்நீர்வடிந்தவர்க் கேமறையோதிடுஞ் செய்யதிரு
வாய்நீரைக்கொண்டு விதனத்தைத்தீர்த்த முகம்மதுவே. (௮)

கொதிக்கின்றவெஞ்சுரப் பாலையில்லாற குளிர்த்துவா
விதிக்கின்றநாயகன் றன்னருளாலும் விளம்பிருள்
பதிக்கின்றநம்பிசு லாமுக்கெல்லாம்படர் தீபமென்ன
மதிக்கின்றநற்சபா அத்தருள்கொண்ட முகம்மதுவே. (௯)

[illegible]திவட்டமானவ ரெக்காலுமஞ்சியுக் கத்தளிக்க
மிதிவட்டவாம்பரி யேறிவந்தோர்களு மேன்மைசொலப்
பதிவட்டமூழ்த்திடுஞ் சூதருமேபலர் பார்த்தறிக்க
மதிவட்டமேயழைத் தோர்க்கம்வாழு முகம்மதுவே. (௰)

அல்லூருரும்பொய்புனா நெஞ்சாபுறுகி லன்றுசொன்ன
சொல்லாரவன்றிறை யோன்றனைப்போற்றித் துவாவிரந்து
நல்லாரவேதிருக் கைகாட்டிநில்லென்ற காரணத்தின்
மல்லூருரக்திண்புயத் தீர்மக்கம்வாழு முகம்மதுவே. (௰௧)

கத்தாவருட்கொடு காஹாவக்கோகவக் கடிநகரி
னுற்றுடரவைத் தடிந்தவக்தேருண்மை போடுநெஞ்சஞ்
சற்றுகிலும்பிச கில்லாதுநீனிற் பறித்தவர்க்கு
வற்றுதமாசெல்வ மேமக்கம்வாழு முகம்மதுவே. (௰௨)

அன்றேரினூர்க்கு ஜாமனவெண்ண மதுமுடிக்க
வென்றேமனதி னினைந்தவப்போதிறை யோன்விடுக்க
குன்றேபசும்பொ னபாஞ்சியேவெள்ளிக் குன்றுவந்தார்
[illegible]றேதிருநகர் மக்காவில்வாழு முகம்மதுவே. (௰௩)

ஆம்பரிவேட மிசுலாமுக்கெலாமட லேபொருந்தும்
பாம்பா[illegible]னின் பயநீக்கியேயிந்தப் பாரதனின்
வேம்பரிவேர்க்கை மதவேடர்காட்டில் விரும்பிநின்ற
வாம்[illegible]போடுப் பேசிடுமக்க முகம்மதுவே. (௰௪)

சந்தனமேடையும் பொன்னூசல்வீதியுந் தாவிநறுங்
கொந்தலர்மேவும் பரிமளககாவும குதாயருளா
லந்தரவானவ ரெல்லோருங்கூடி யடிபணியு
மந்தரவாவிகள் சூழ்மக்கம்வாழு முகம்மதுவே. (௰௬)

கதிக்குஞ்சுடர்வல்ல யத்தளவாகிக் கதிர்முடுகிக்
கொதிக்கின்றசெம்புத் தரையானபோது குதறத்தினு
லுதிக்கின்றமாந்தரைக் கேள்விகள்கேட்டு மூமுக்கயிலே
மதிக்குஞசபாஅத் தருள்செயயுமக்க முகம்மதுவே. (௰௭)

எயும்புவியி னறிவாளர்போற்ற விருத்தினிற்செந்
நாயுமுடும்பும் பேசிடப்பேசுநல் வேதங்களுந்
தோயுங்கிருபை யுடையோனைப்போற்றித் துலாவிரந்து
மாயுங்குபிரை நீக்கிடுமக்க முகம்மதுவே. (௰௭)

சுறுமாவிழிக்கிட்டுக் கையாலபம்பொற்றிச் சோதியொன்றென்
றுறுபாலிலத்திற் பிறந்துவந்தேருடை யோனருளா
லறுமாமொழிசொல்லி யசுகாபிகள்கேட்ட வழிவுக்கெலா
மறுமாமொழிசொலி மககாவில்வாழு முகம்மதுவே. (௰௮)

விண்மீதிலங்கு சுவர்க்கத்தின்மாதர் விரும்புமலர்க்
கண்மீதிலங்கு மணிச்சுடரோகன காவியத்தின
பண்மீதிலஙகும் பாக்கியமேபசும் பொன்னெனவே
மண்மீதிலங்கு மறையோதுமக்க முகம்மதுவே. (௰௯)

சவுத்தானசத்த மிறையவனுல்வரச் சத்திரத்தின
மவுத்தாய்ககிடக்கிடக்கின்ற மையத்தைக்கூப்பிட்டுவம்பெனவே
பவுத்தாகச்சென்ற வசுகாபிகள்காணப் பகாவிருந்தின
மவுத்தானபிள்ளையைக் கூட்டிப்புசித்த முகம்மதுவே. (௨௰)

ஆட்டெலும்பானதை யாடாக்குமற் றரசர்காப்
பூட்டெலும்பான தொடிந்தேமுறிந்திடப் பொருதுவென்று
கோட்டெலும்பாக்கு மெல்லோருங்காணக் குதாயருளான
மாட்டெலும்பானதை யாடாக்குமக்க முகம்மதுவே. (௨௧)

நத்திரையோசைத் தடஞ்சூழுமக்கத்தி னூட்டிவைத்த
புத்துரைபோகப் பொடியாக்கிவிட்டவிப் பூதலத்தி
னத்திரைவீரர் பணிந்தேத்தும்வீர வாதியருள
முத்திரைமேவுந் திருத்தோளிலங்கு முகம்மதுவே. (௨௨)

நீரிட்டதிரை நெடுங்காலமாகவிர் நீணிலத்திற்
கூறிட்டமாக வணங்கியகாபிர்கள் கூசவத்திச்
சீறிட்டகோபமு மாறுதவெப்பமுந் தேய்ந்துகெட்டு
மாறிட்டமாகிட மக்காவில்வாழு முகம்மதுவே. (௨௩)

அட்டாமகோதும்பை யுண்டானமட்டு ம்மங்காழிகொண்டு
முட்டாமலாயிரம் பேர்க்கு யசன மொழிந்தளித்த
செட்டானவையொன்று மத்தாய்ப்பெருகிடுஞ் செங்கமல
நாட்டாரும்வாவிகள் சூழ்மக்கம்வாழு முகம்மதுவே. (௨௪)

வாமவந்துசேரு முடைபோன்மகிழ்ந்து வாவிடுத்த
தூம்வந்ததூதர் ஜிபுரீலு சொல்லித் துவானிரந்து
சாமவந்தகாவி லறலேபெருமிச சூரந்திடப்பின்
மாமவந்துசூழ்ந்திடச் சுத்ரமுண்டாக்கு முகம்மதுவே. (௨௫)

எல்லாப்படைப்புக்கு மூன்றுகிவல்லப மெண்ணவொண்ணுன்
சொல்லாருநன்னபி மாருக்கெலாம்பின்னர் தோற்றித்துன்யாப்
பொல்லாக்குபிரரைச் சேரவோட்டாமற் பொருதுவென்று
வல்லாஇவல்ல புகழ்வீரமேங்கு முகம்மதுவே. (௨௬)

அருந்தாதநாய னளவிலொனுழக மகிழ்ந்து
பொருந்தாதபேரும் பொருமிடவேபுக ழேங்கடத்தித்
திருந்தாக்குபிர்நிலை யெல்லமொழிந்திடச் செய்தமொழி
வருந்தாதவூமையைப் பேசிடச்செய்த முகம்மதுவே. (௨௭)

உரம்வந்துகிட்டப் பகியே நிலந்திடு மூக்கவொன்னர்
சிரம்வந்துகிட்ட வடிவாட்டையூட்டுந் தென்றலிலாச்
சுரம்வந்துகிட்டத் தண்ணீரழைத்தொல்லை சூழ்வனத்தில்
வரம்வந்துகிட்டச் செய்திடுமக்க முகம்மதுவே. (௨௮)

திண்டாடுமன்ன ரணிசாயவொர்பிடிச் செங்கைமண்ணுற்
கொண்டாடவம்ப ரிரிந்தோடச்செய்தநற் கொந்தலருந்
தண்டாமரையி னன்னங்களாருந் தடாகங்களும்
வண்டாடுஞ்சோலையுஞ் சூழ்மக்கம்வாழு முகம்மதுவே. (௨௯)

காங்கொண்டவேலின் வீசிடக்கூடுங் கடும்பகைய
ரூங்கொண்டவீட்டிற் புகழ்வீசக்காட்டி யுறவிருந்தார்
வரங்கொண்டநாய னுதவியதாலு மகிழ்ந்துலர்ந்த
மரங்கொண்டுநட்டிப் பழந்தந்தமக்க முகம்மதுவே. (௩௰)

மூன்னாளிலேயொரு காபிருக்காகமுன் வைத்தபுத்தோ
டென்னுதாவுகள் பேசிடென்றேதவிறை யோனருளா
லென்னாளுங்காத மணக்குங்கஸ்தூரி யிலங்குமூடன்
...னுவெனச்சொல மக்காவில்வாழு முகம்மதுவே. (௩௧)

ஒண்பேயிட்டு மலரிட்டுக்காபிர்க ளுருகியறற்
கண்டேநின்று வணங்கிடுபத்துக் கவிழ்ந்துவிழப்
பண்டேவேத முழங்கிடுசெங்கட் பருவயிற்றின்
மண்டேவாவி புடைசூழுமக்க முகம்மதுவே (௩௨)

பொன்கண்டபூமிப் புகழ்நினையாதுறு புத்தியெல்லாங்
கொன்கொண்டநாயன கிருபையினுளிதங் தொழக்கால்கு
மின்கண்டகீர்த்தி யுலகேழும்போற்ற விளக்குசெக்கண்
மூன்கண்டதூரம் பின்கண்டுவாழு முகம்மதுவே. (௧௩)

செட்டகஞ்செய்ய முன்பாதைபோகயிற் சிரந்தனைக்தே
மூட்டகஞ்செய்யுமபுஜகின்மார்பினில் மோதியிடி
யொட்டகையேனின்று கீழ்விழுத்தாட்டுமுடை யோனருளான்
மட்டகவாவி புடைசூழுமக்க முகம்மதுவே. (௧௪)

துயிலும்பொழுது நடக்கின்றகாரியந் தோற்றமுண்மை
பயிலும்புதியவனிடுகின்றகட்டளைப் படிபிசகா
தயிலுஞ்சுடரொக்கீன் மீதேமறைக்கனியழுதரு
மயிலூர்ந்துதிசெயு மயிலாகிவாழு முகம்மதுவே. (௧௫)

பறக்கின்றபட்சியைக் கொன்றிடுகாபிர்கள் பார்த்துமிழ்கச்
சுறுக்கென்றதனை யெழுப்பிவிட்டேமிகு தூயபுகழ்
பிறக்கின்றதீன்பயி ருண்டாக்கிமாபெரியோனைநித
மறக்கின்றதுங்கிடை யாமக்கம்வாழு முகம்மதுவே (௧௬)

பொய்விட்டஞானத் திறத்தினர்யாரும் புகழ்ந்துநிற்க
மெய்விட்டமாகப் பிறந்துவந்தேயிந்த மேதினியிற்
கைவிட்டவேலின் குபிரோரைவெட்டிக் கருவறுத்து
மைவிட்டசோலை சூழ்மக்கம்வாழு முகம்மதுவே. (௧௭)

நெஞ்சிற்பழுதோன் றணுகவிடாம னிறுத்திபென்று
மஞ்சிக்குடையிட வந்துவிநோத மகிழ்ச்சிபெற
நஞ்சிக்கநிகைய யமுதாக்கித்தின்று நலந்திகழும்
வஞ்சிக்கிழவியைக் கன்னிகையாக்கு முகம்மதுவே. (௧௮)

பாயும்புலியக் திருநாமஞ்சொல்லிப் பயணமென்று
காயுஞ்சுடர்வழி யெல்லாங்கடந்து கருத்தினுற்றுத்
தேயுங்கிருபை யுடன்போகவங்கு துவாவிரந்து
மாயுங்குபிரை நெருங்காமலோட்டு முகம்மதுவே. (௧௯)

சொர்கத்திலாசி யாமதியாவையுந் துதிமணஞ்செய்
தொக்கச்சுகித்துத் தீனவர்யாவருமுடை யோனருளாற்
பக்கத்திருத்தி விருந்தியும்போதினைப் பார்த்திரங்கு
மக்கத்திலேபா சாண்டிடுமெங்கள் முகம்மதுவே. (௨௰)

முன்னோர்கள்பாடிய- காசிம்மாலை- முற்றிற்று.

பிசுமில்லாகிற்றகுமானிற்றகீம்.

இஃது

முன்னோர்கள் [illegible]டிய
காசிம்படை[illegible]போர்.

காப்பு-விருத்தம்.

தாரணிவாரணமெல்லாஞ் சமத்[illegible]கிரப்பிநி[illegible]
காரணன்றாதரான கப்புல்லா[illegible]கிழ்மருகர்
நோணியலியார்மைந்தர் நிறை[illegible]தகஞ்மணி[illegible]
சிரணிஅசனூர்பாலர் செய்[illegible]படைப்போரைச்[illegible]ல்வாம் (௧)

மாருகர்மதினத்துற்ற முகம்மதுநபியுல்லாதந்
தீனினைச்சேர்ந்தமன்னர் செய்குமீறஞ்சிமைந்த[illegible]
தேனினுமின்பமார்ந்த செவ்வியமொழியேசெ[illegible]பு
மானயாசெய்திபுறகீம் வள்ளலிவ்வுரைதந்தாரால (௨)

உரைதரவின்பமாக வுலகுள்ளோரறியவேண்டித்
தரைபுகழ்காசீம்போரென் றிதற்குறுபெயர்கொடுத்து
விரைமலர்போன்றபாடல் விரும்பியேபுகழ்ந்தடியேன்
பரிவுடனுவிலோதப் படைத்தவாகாப்புநீயே (௩)

கண்ணிகள்

ஆலம்படைத்தவனே - புக - ழாரும்றகுமானே
காலமுமுள்ளவனே-கிருபையாற்-காத்தருளாண்டவனே (௧)

வள்ளல்முகம்மதொடு-மவர்கள்-வரிசையார்நால்வரையு
முள்ளகத்தேயிருத்தி-யனுதினமோதிப்புகழ்ந்திடுவேன் (௨)

ஆதியருள்தூதர்-மருகரான அலியார்தந்
நீதருசைனுடனே-சகலோரு-நிறைந்தார்கறுபலாவில் (௩)

அண்டர்புகழ்ந்தேற்று-முசைனு-ரங்கனிருக்கையிலே
வண்டனெசீதுபடை-சுற்றியே-வந்துவளைந்தன்றோ (௪)

அந்தச்சமயத்திலே-அலியக்குபரா-க்ரமத்தோடெழுந்து
மூந்[illegible]யேபோர்செய்ய-வந்தொருவன்-மூன்[illegible]ளிதாய்வெட்டிவிட்டால (௫)

கா[illegible]னைமுருகி-யவரிரு-கண்கணொருப்பெரியப்
பேசி[illegible]கவுருகி-யுயர்ந்த-பெரியோன்விதியென்றெண்ணி (௬)

ஆலங்[illegible]ளையில்-நாமெல்லா-மவர்களின்கோத்திரத்திற்
காலக்கொடுமையினுல்-நமக்கிந்தக்-காரணம்வந்ததென்றே (௭)

தன்னுடனேபிறந்த-அலியக்குபர்-ஷஹிதாய்க்கிடப்பதனை
மன்னரப்துல்காசிம்-கண்ணினாற்கண்டேயெழுந்திருந்து (அ)

கொந்துபடைக்களம்போ-யலியக்குபரை-கொடியிலெடுத்துவந்து
அந்தக்கறுபலாவி-லினவருங்-கூடியடக்கினரே (௯)

அங்கோத்தில்காசிம்-விரும்பி-யாண்டவனைப்புகழ்ந்து
முன்னர்வளைந்து-கொண்டபடைக்கு-மூர்க்கமாய்ப்போகவெண்ணி (௰)

சிங்கரிகரனைய-அலியின்-செல்வருசைனயினார்
பங்கயமார்முகத்தின்-முன்னில்வந்துபாதம்பணிந்துசொல்வார் (௰௧)

எந்தன்றகப்பனுடன்பிறந்த-செல்விலானந்தந்தையரே
வந்தபடையைவெல்லவிடை தந்து-வாழ்த்தியனுப்புமென்றார் (௰௨)

அந்தமொழிகேட்டே-ருசைனார்-அல்லாதனைப்புகழ்ந்தே
சிந்தைமிகக்கலங்கி-காசிமுக்குச்-சீராய்நவிலலுற்றார் (௰௩)

தங்கமுடிசூடும்-என்றன்-றமையனாரீன்றகன்றே
எங்கள்குலக்கொடியே-விடை-தாரதிங்கெந்தவிதம் (௰௪)

உந்தனையீன்றெடுத்த-அசனார்-ஒசிய்யத்துச்செய்தபடி
வந்தமகனாரே-யுமக்கு-மணக்கோலஞ்செய்யவேணும் (௰௫)

மின்னலிடைக்கொடியாள்-பீவி-பாத்திமாபோரசி
கன்னிகுலக்கொழுந்தை-யுமக்குக்-கலியாணஞ்செய்யவேணும் (௰௬)

என்றங்குசைனார்சொல்ல-காசிமுக்-கெல்லோருந்தான்கூடி
அன்றுமனமகிழ்வாய்க்-கறுபலாவி-லன்பார்மணமுடித்தார் (௰௭)

நிக்காகுமுடிந்தபின்பு-வீரமுள்ள-நீதாப்துல்காசிம்
தக்கவெழுந்துசைனார்-வன்னத்-தாமரைத்தாள்பணிந்தே (௰௮)

கத்தனருளின்புலி-யலியார்-கருணைமகனாரே
அத்தன்பாஞ்சாட்டி-விடையினைத்-தந்தங்கனுப்புமென்றார் (௰௯)

என்னிருகண்மணியே-மகனே-யெங்கள்குலக்கொழுந்தே
பொன்னின்மகனாரே-யுனைப்பெற்ற-பூவைக்குச்சொல்லுமென்றார் (௨௰)

தாயார்மனைபுகுந்தே-அம்மாளின்-சரணவடிபணிந்து
மாயனெசிதைவெல்ல-வெனக்கே-வாழ்த்திவிடைகொடுப்பீர் (௨௧)

இத்தனைநாட்சுமந்து-மகனே-என்றறஹீம்வயிறு
பற்றுதேஎன்மகனே-பகர்ந்தசொற்-செற்றலுமாறுதே (௨௨)

சித்தங்கலங்குதையோ-வுடல்-சோரமயங்குதையோ
பற்றியெரியுதையோ-மகனே-பெற்றவயிறெனக்கு (௨௩)

கண்ணுகளென்கின்றதே-ம[illegible]னே-யென்னகங்கருகின்றதே
உண்ணு[illegible]லமுத-மெனக்கு-உ[illegible]யோகமில்லையந்தோ (உ௪)

இந்தப்படி[illegible]க்க-காசிம்-சொல்வா[illegible]ன்றுயேகீர்கேளுஞ்
சிந்தைகலங்க[illegible]தே-யிக்.றவன்-செயல[illegible]வதுண்டோ (உ௫)

பெண்கட்கரசியரோ-சுமங்தெனப்-பெற்றவிளமயிலே
பங்கெனசீதைவெல்ல-வென்றன்முகம்-பார்த்துவிடைதருவீர் (உ௬)

மாமியாதம்மகனுய்ப்-பிறந்த-வஞ்சனசீதுபடைப்
பாவியோனைவெல்ல-வெனக்குப்-பண்பாய்விடைதருவீர் (உ௭)

பார்த்துமனமகிழ்ந்தே-யுங்களின்-[illegible]ரச்சலிப்பாற்றி
வத்தவிடை-கொடுத்துப்-போய்வா-வழிலாயனுப்புமம்மா (உ௮)

பாத்திமத்துஸ்சுஹறு-வென்னும்-காத்துானஜென்னத்தின்மேல்
பாத்திஹாகீரோதிப்-போய்வரப்-பண்பாயனுப்புமம்மா (உ௯)

ஆசிர்கிளைதழைக்கத்-துன்யா-ஆலமெல்லாம்வளர
வாசியில்காசிமேதிப்-போய்வர-வல்லோனேகாத்தருள்வாய் (௩௰)

பாலாப்துல்காசிம்-பண்பார்மணங்-கோலமழியாமற்
பாளையப்போரிடத்திற்-பார்த்திபனே-யேழைபைக்காத்தருள்வாய் (௩௧)

ஆதியிறைபவனே-யெவ்வஸ்தைய்-மாளும்நகுமானே
நீதரப்துல்காசிம்-தன்னையே-நித்தமுங்காத்தருள்வாய் (௩௨)

என்றங்கிறைபிடத்திற்-கை-யேந்தித்துவாக்கேட்டு
நன்றிமகனுரோ-படைபோய்-நன்மையாய்வாருமென்றார் (௩௩)

பாதந்தனைத்தொழுது-விடைபெற்றுப்-பாங்காயெழுந்திருந்து
நீதரப்துல்காசிம்-தன்னி-னேரிழைவீட்டில்வந்தார் (௩௪)

கன்னியெழுந்திருந்து-சுத்தப்-பன்னீராற்கால்கழுவி
வன்னமார்கூந்தலினுற்-றுடைத்து-வாழ்த்தியருகிருந்தார் (௩௫)

பெண்கட்கரசியரே-புனைஞர்-பெற்றவிளங்குயிலே
வண்கணேசீதுபடை-செல்லவிடை-வாழ்த்தியனுப்புமென்றே (௩௬)

இராஜமுடிசூடு-முனைஞர்-நயகரீன்றகண்ணே
தோ[illegible]யெசீதைவெல்ல-யிப்போதுசுறுக்கிலனுப்புமென்றே (௩௭)

சொன்னமொழிகேட்டு-மயங்கித்-துடித்தப்பதைபதைத்துத்
தன்னிலேமெய்சோர்ந்தே-யுடல்-தன்னைமறந்துநின்றே (௩௮)

மன்னரலிப்புலியின்-அசனர்-மைந்தரேயென்னசொன்னீர்
பொன்ன[illegible]னமேனியெல்லா-மெனக்குப்-புண்ணுயிருக்கின்றதே (௩௯)

எந்தனுயிர்க்குயிரோ-அசனு-ரீன்றதவப்பொருளே
வந்துமண்முடித்-தீரொன்றனின்-மையல்தெளியவில்லை (சம)

அங்கமெலிந்துருகிச்-சலிப்பை-யடக்கமுடியாமல்
திங்கள்முகங்கருகி-மனைவி-தியங்கியயிற்கையிலே (சக)

எங்கள்குடிக்காச்-ருசைனு-ரீன்றகுலக்கொடியே
தங்கள்சலிப்படக்கி-விடையே-தந்தகனுப்புமென்ருர் (சஉ)

கன்னியெழுந்திருந்தே-அதபாய்-காசீம்பதம்பணிந்து
மின்னுள்விழிசிவககச்சலிப்பாய்-விம்மிக்கலாந்தழுதார் (சங)

பார்த்துஅப்துல்காசிம்தன்னின்-பாவைதலையுயர்த்தி
...திகண்ணீர்துடைத்து-முகத்தைப்-பார்த்தொருசெய்திசொல்வார்

ஆதியெழுத்தின்படிக்-கணு-வளவாகிலுந்தப்பாது
சோதிமகுஷ்திலே-யிறைவன்-ஜோடியாய்ச்சோத்துவைப்பான் (சடு)

என்றமொழிகேட்டே-ஆமீனென்-றெழுந்துமுகம்பார்த்து
வென்றிமகுசதிலே-யுமக்கு-அடையாளம்விள்ளுமென்ருர் (சசு)

எங்கள்குலத்தரச ருசைசனுரின்புறஞ்செல்வியேகேள்
எமகையின்சட்டையிலே-கிழித்தே-யிருக்குமடையாளம் (சஎ)

காசிமுரைகேட்டே-ராசி-கத்தன்றனைப்போற்றி
ஆசிங்குலககளிறே-போய்வாரும்-அல்லாவுதவியினல் (சஅ)

மக்கமுகம்மதுற்றசூல்நபி-மா-துவாப்பேறினுலும்
ஹக்கனுதவியாலும-கருணை-யாகவேபோய்வாரும் (சகூ)

வான்த்தறுசேறு-மிறசூல்-வள்ளல்திருப்பேரோ
ஈனமெனசிதைவெல்ல-வுமக்கு-இறையோனுதவிசெய்வான் (ருவ)

பொன்கரும்புமொழியார்-அசனர்பூரிப்பார்மன்னவரே
என்கண்களிகூரப்-போய்வரவேகனுதவிசெய்வான் (ருக)

மின்னிடையின்மனைவி-விடைதனைப்-பெற்றேயெழுந்திருந்து
மன்னர்அப்துல்காசிப்-பாய்ந்திடும்-வாம்பரியேறிச்சென்றே (ருஉ)

சிங்கத்தின்குட்டியது-யானைத்-திரளினுடைழந்ததுபோற
பங்கமெசிதுடைய-நிறைந்த-பாளயம்போய்ப்புகுந்து (ருங)

காசிம்படைபொருத-உமறு-கண்டுமனமயங்கி
ஆசிம்கிளையுதித்தேயுயரும் ஆண்பிள்ளைச்சிங்கமென்றே (ருச)

பார்த்தங்குடலெரிந்தே-யுமறு-பல்லைநெறுநெறென்று
நெத்தியபிள்ளையிவர்-வெட்டதைப்-பார்த்திங்கிருப்பதென்ன (ருரு)

கோபத்துடனெழுந்தே-அசறத்ஙசக்-கொடுமையார்வார்த்தைசொல்லித்
தாவிகாசிமுடனேபோர்செய்தவன்-தலையையறுப்பாயென்றான் (௫௬)

சொன்னமொழிகேட்டு-அசறக்குந்-துடித்தேயிதழ்கடித்துச்
சின்னஞ்சிறியவனேடெதிர்ப்போர்-செய்வதுஞாயமல்ல (௫௭)

என்றப்போ-தங்கவன்றான்ஞ்றமைந்தர்களுல்வரிலே [ண்
முன்னுறும்பிள்ளையைப்போய்-காசிமுடன்முடுகியேபோர்செய்யென்று

மூத்தமகனெழுந்து-கோதித்து-மூர்க்கமாய்வாளோங்கி
ஏற்றகுதிரையின்மே-லேறிக்காசிமிடத்தின்முடுகிவந்தான் (௫௯)

காசிமனம்பூரித்துப்-புலிமுன்-நடாயதுவந்ததென்றே
தோசியுமறைபிங்கனென்-முன்னே-சுறுக்காய்வரச்சொல்லென்றார் (௬௰)

சொன்னமொழிகேட்டே-சூமன்-சுறுக்காகவாளோங்க
மன்னபப்துல்காசிமவனை-வாளினால்வெட்டிவிட்டார் (௬௧)

தன்னில்கிறுகிறுத்துச்-சூமன்-றஙாயில்விழுந்திடவே
பின்னொருமகனை-யதட்டிப்-பேசியனுப்பிவைத்தான் (௬௨)

வந்தங்கலங்கரித்தே-யவனும்-வாளாலேயோங்கிவெட்டச்
சிந்தமகிழ்ந்துகாசிமவன்றன் சிரசைத்துணித்துவிட்டார் (௬௩)

இந்தப்படியேவந்து-நால்மக்களும்போர்செய்திறந்தபின்பு
சிந்தைமிகக்கலங்கி-யுமறு-சபையில்முடுகிச்சென்றே (௬௪)

பார்த்தங்குநிற்குகின்ற-அசறக்கைப்-பல்லைக்கடித்துறச்சி
நேற்றயபிள்ளையென்றுயவாவலி-பார்த்தியாவென்றுசொன்னான் (௬௫)

சொன்னமொழிகேட்டு-அசறக்குத்துடிப்போடெழுந்திருந்து
துன்னும்பரியேறிக்காசியதன்னைச் சுற்றிவளைத்துநின்று (௬௬)

வாளாற்சமர்பொருதே-யிருவரு,மல்லாடும்வேளையினிற்
காலையப்துல்காசிக்-குதிரையின்-கால்களைவெட்டிவிட்டான் (௬௭)

நின்றகுதிரைவிழ-காசிம்கீழ்-நிற்கும்நிலைபார்த்து
வென்றியாருமுசைனார்-கச்சி-விரைவாயனுப்பிவைத்தார் (௬௮)

கச்சிக்குதிரைவரக்காசிமும்-கடினத்தோடதிலேறி
மெய்ச்சேயலங்கரித்துப்பாய-மின்போல்நடத்தினரே (௬௯)

பொட்டையசறக்கவ-னெதிர்த்துப்-போர்செய்யும்வேளையினிற்
கட்டழகானகாசிமவனைக் கண்டொருசெய்திசொல்வார் (௭௰)

வண்டனெசிதுபடைச்சேனைகள்மன்னரில்நீபெரியோன்
சண்டைக்குதிரையுடன்-தங்குபடி-வாரையிறுக்குகென்றார் (௭௧)

வார்த்தைமொழிகேட்டு-அசறக்கு-வாகாக்குனிந்திறுக்கப்
பார்த்தவுடன்காசீமவனைப்-பாரில்விழவெட்டினார் (௭௨)

சாய்ந்தான்மலைபோலப்-பிள்ளைகளுடன்-தசப்பனுமேகிடக்கப்
பாய்ந்தார்குதிரைவிட்டுச்-சேனையுட்-பாரவிடிபோல (௭௩)

மாவினிலேறிவரும்-வீரர்கள்-மன்னர்சிரமுருளத்
தாவிப்படைபொருதே-வெசிந்து-தளத்தைக்கருவறுத்தார் (௭௪)

விண்டுவிண்டுகிடக்கச்-சேனைத்தளம்-வெட்டியோரத்தஞ்சிந்தச்
செண்டுபோலேபறக்கப்பரியைத்-திருப்பியேவீடுவந்தார் (௭௫)

காசிம்வரவுகண்டே-புசைனார்-கண்ணுடன்கண்ணைவைத்து
வாசமாரும்மகனே-யெனப்போற்றி-வாழ்த்திமனமகிழ்ந்தார் (௭௬)

மைந்தனெழுந்திருந்தே-தன்னின்-மாதாவளவிற்சென்று
வந்துபதம்பணியப்-பெற்றதாயார்-வாழ்த்தியணைத்தெடுத்தே (௭௭)

எந்தன்குலக்கனியே-அசனா-ரீன்றவரிப்புலியே
வந்ததேபோதுமென்று-வண்ணமாய்-வாழ்த்திமனமகிழ்ந்தார் (௭௮)

அங்கேரமேயெழுந்து-காசீ-மழகாரும்-சிற்றிடையார்
சொன்னயத்தோடுபேசும்-மனைவி-யிடத்தில்சுறுக்காய்வந்தார் (௭௯)

வஞ்சியிளமயிலார்-அசனார்-மைந்தர்வரக்கண்டே
அஞ்சிப்பதம்பணிந்து-முத்தாலாலத்தி-சுற்றிச்சொல்வார் (௮௰)

பொன்னிணவரத்னமே-அசனா-புண்ணியரீன்றமன்னே
கன்னிமதந்தீர்க்குங்களிறே-நும்மைமககண்டதேபோதுமென்றார் (௮௧)

கண்டுமனமகிழ்ந்து-இருவரும்-கண்கள்களிகூர்ந்து
விண்டங்கிருக்கையிலே-பாளையங்கள்-வந்ததெனறேவிண்டார் (௮௨)

சொன்னமொழிகேட்டுக்-காசிம்-சுறுக்காயெழுந்திருந்து
மன்னருசைனப்புகளே-எனக்கு-வாழ்த்திவிடைகொடென்றார் (௮௩)

போய்வாருமென்றுசொல்லி-யரசி-போற்றிப்பதம்பணிந்து
நாயனுமறைவல்ல-வுமக்கு-வல்லோனுதவிசெய்வான் (௮௪)

கோட்டைமதில்தாண்டும்-வல்ல-குதிரையின்மேலேறித்
தாட்டிகமாய்நடத்தி-யுமறு-தளத்திலுட்பேய்ப்புகுந்தார் (௮௫)

காசிமைக்கண்டவுடன்-ரளத்தின-கனத்தலைசர்களும்
ஆசிம்கிளைவழியி-லுதித்த-ஆணப்பிள்ளைச்சிங்கமென்றே (௮௬)

வேங்கையைக்கண்டகடாய்-பயந்து-விண்டுதெறித்தாற்போற்
றேங்கவெசிதுதள-திற்காசெதங்குஞ்-சிதறியேயோடிடவே (௮௭)

வெட்டிமனம்பூரித்துக்-குதிரையை-வேகத்தோடேநடத்த
இட்டமாய்வானோர்கள்-பூமாரி-பெய்குமேதான்பொழிந்தார் (அஅ)

ஆதிதனைப்போற்றி-வானோர்கள்-ஆதினதனைமுழக்கிச்
சோதியுசைன்மகளார்-தமக்குச்-சோபனமென்றுசொன்னார் (அக)

பொருதும்படையோடக்-காசிமவர்-புகதிமகிழ்கூர்ந்து
கருதுகளத்தைவிட்டுத்-தன்னின்-காரிகைமனையில்வந்தார் (கய)

மானாஉசைன்மகளார்-முனைளைக் கண்டுமனமகிழ்ந்து
பொன்னினாலாலாத்தி-யவர்க்கு-பூரிப்போடும்சுழற்றி (கக)

வந்தங்கிருபேருஞ்-சப்ர-மஞ்சத்தின்மீதிருந்து
சந்தோஷமாகையிலே-பாளயம்-வந்ததென்றேசாற்றினார் (கஉ)

கேட்டவுடன்காசிஞ்-சுறுக்காய்க்-கீழேயிறங்கிவந்து
தாட்டிகமாவுமறை-வென்றுவாத்-தக்கினிடையொடென்றே (கங)

சொன்னமொழிகேட்டு-மயங்கித்தோகைகண்ணீர்சிந்தி
மன்னர்தனையழைத்தே-யவர்க்கு-மறுமொழிசொல்லலுற்றார் (கச)

இரண்டுதரம்போயவந்தீ-ருளா-ரிறைவனருளதவியினால்
இன்றுபகைடபோறீ-ரற்குரத்த-வாடைமணக்குதென்றே (கரு)

கண்ணினொளியாகத்-துலங்கும்-கல்பினுக்குயிரோ
வண்ணக்கிளிக்கரசே-போக்ச்சொல்ல-வாணால்கருகுதென்றே (கசு)

ஈரம்றுமணக்கின்றே-மூக்கிலாத்த-வாடைமணக்கின்றதே
வாரயிலேகஸ்தூரி-ரத்த-வாடைமணக்கின்றதே (கஎ)

இத்தனைபாராட்ட-மணங்கு-கிரங்காமல்நீர்போமீர்
கத்தன்கிருபையினு-லும்மையென்றுங்-காத்தக்குதவிசெய்வான் (கஅ)

கன்னிமொழிகேட்டுச்-சுறுக்காய்க்-காசிமெழுந்திருந்து
வன்னக்குதிரையின்மேற்-சீனியதை-வைத்தேயிறுககுமென்றார் (கக)

கச்சிக்குதிரையின்மேற்-பச்சை-மூத்தின்துருவும்வைத்து
வைச்சிரந்தாலிழைத்த-முகப்பட்டை-வைத்துமேதான்கட்டியே (க௦௦)

மாணிக்கரத்தினத்தா-லிழைத்த-வயிரக்கடிவாளத்தைப்
பேணிக்கையாய்க்குதிரை-தனக்கும்-பேர்பெறத்தான்சேர்த்துத் (க௦க)

செங்கமலம்போன்ற-பசிய-செம்மணிசேர்த்திழைத்துத்
தங்கள்குதிரையின்மே-லதனைத்தளராமறகட்டினரே (க௦உ)

கமருபந்தையெடுத்தே-யிடையினிற்-கட்டிச்சருவததுடன்
ஒன்பதிரத்தினத்தா-லிழைத்து-முயர்ந்தபூச்சல்லாவும் (க௦௩)

அன்புடனே மகிழ்ந்தேயெடுத்து-அங்கிரிஜா றணிந்து
[illegible] தலத-யெடுத்தே-யிலங்கச்சிரத்தணிந்தே (௧௦௪)

சந்தனமுதலுள்ளவெவ்வாசமுஞ்சரீரமெல்லாம் பூசி
யிந்திரவழகதுபோ-லிங்க-வேதினார் குதிரையின்மேல் (௧௦௫)

ஆண்புலியானகாசிம்-ஜோடிப்-பழகுதனைப்பார்த்து
வான்வரானமாதர்-மிகவும்-வாழ்த்தினாரந்நேரம் (௧௦௬)

தந்தைமுகம்பார்த்துத்-தனைப்பெற்ற-தாயார்முகம்பார்த்துச்
சிந்தையுறுந்தேவி-முகம்பார்த்துச்-செய்தியொன்றுசொல்லுவார் (௧௦௭)

எந்தனெழுத்தின்படிக்-கிருக்கு-மென்செய்யப்போறேனென்று
அந்தமுடனகாசிம்-பரி[illegible]ய-பதட்டிநடத்திவிட்டார் (௧௦௮)

வாசியனுபனித்துக்-கா[illegible]ன-றாசி-வானலோகம்பறக்கக்
காசிமலங்கரித்து-வருவ[illegible]தைக்-கண்டார்படைவேந்தர் (௧௦௯)

வாசியின்மீதேமி-ஆரவார-மாகவருகின்றதை
மூசிகடாவகள்கண்டு-படை[illegible]யை-முன்னேநெருக்கினார் (௧௧௦)

யானைப்பரித்திரளிற்-சிங்கம்-மலறியேபாய்ந்ததுபோற்
[illegible]படைபுகுந்தேதலைவர்-சிரமுருளவெட்டினார் (௧௧௧)

மாவைப்பிளந்தறுத்தே-பதி[illegible]று-மன்னர்சிரந்துணித்தே
தாவிப்படைபொருதுமிகுந்த[illegible]த்தினைச்சூறையிட்டார் (௧௧௨)

யானைத்தலையுருள-வதிர்சேர்ந்த-ஆண்பரிதானுருளச்
சேனையோதான்வெருள-வெட்டியே-சிதறக்கருவறுத்தார் (௧௧௩)

வெட்டிக்கருவறுத்துக்-கறுபலா-வெளியினில்நிற்கும்போது
மட்டியுமறுமன்னன்-சுறுக்காய்-வந்தெதிர்நின்றனனே (௧௧௪)

காசிமவனைக்கண்டே-யிரு-கண்களநெருப்பெரிய
வாசியின்மீதேறி-யுமறுவம்பனுடனெதிர்த்தார் (௧௧௫)

வந்தவனெதிர்த்துகொண்ட-வுமறு-மந்திரிதானெதிர்த்துப்
பந்தயப்போர்செய்ய-வாருமென்று-பாதகன்சொல்லினனே (௧௧௬)

சொன்னமொழிகேட்டு-காசீம்-சுறுக்காய்வாசிநடத்தி
மின்னலிடிபோல-யிருவரும்-வெட்டத்துணிந்தனரே (௧௧௭)

கொக்குத்தளந்தனிலே-கூறும்-ராஜாளிபாய்வதுபோற்
றிக்குதிசைகளெல்லாம-பிரணமாகச்-சேரக்கருவறுத்தார் (௧௧௮)

வெட்டிக்கருவறுத்துக்-குருதி-வெள்ளம்போலெங்குமோட
மட்டில்லாச்சேனைப்படை-மிதந்தது-மண்டமார்க்கறுபலாவில் (௧௧௯)

உதிரத்துளிதெறித்தே-காசிமி-னுடலெங்குந்தானனைந்து
மதுரத்துளிமொழியார்-காசியங்ஙன்-வாடிமயங்கிநின்றார் (௧௨௦)

இரத்தக்களைதாக்கி-காசி-மிருக்குநிலைபார்த்து
சற்றுமிரக்கமில்லாவுமர்சாதுஜல்தியர்முன்னில்வந்தார் (௧௨௧)

சுற்றிவளைந்[illegible]நின்ற சூரர்களைக் கிட்டநெருங்கொட்டாமற்
சற்றுமயங்காமல்-காசி[illegible]வர்-சங்கையாய்வெட்டிநின்றார் (௧௨௨)

எத்தனைபேர்களுடன்-காசி-மெதிர்த்துமேபோராடிச்
சித்தமயங்கிடவே செழுந்தண்ணீர்த்தாகமும்வந்ததுவே (௧௨௩)

இப்படிப்[illegible]போராடிக்காசிமிருக்கின்றவேளையிலே
தப்பில்லா[illegible]லுணர்ந்து-தண்ணீர்த்தாகப்பெரிதா[illegible]ர் (௧௨௪)

இந்தப்படியாக்-சமர்செய்-திருக்கின்றவேளையிலே
சிந்தைமகிழ்வாகி-யுமர்சாது-சேனையோடும்வளை[illegible]தான் (௧௨௫)

செற்பங்கலங்கும்படி-போர[illegible]தோர்-கிட்டநெருங்கிடாமல்
அற்புதமானகாசிந்-துரத்[illegible]ங்ஙனம்வந்து[illegible]னரா (௧௨௬)

நிற்கையிலேமயங்கி-யுய[illegible]நித்தனைத்தானினைந்து
மக்கநபிதமையும்-அலியைய[illegible]-வாழ்த்தியேபோற்றிநின்றார் ([illegible])

அந்தரங்களத்தி-லுடல[illegible]த்தமணம்வீ[illegible]
அந்தச்சமையத்திலே-காசிம[illegible]-அல்லாகூ[illegible]ன்றுநின்றார் (௧௨௮)

சரணைமதிமயங்கிக்-காசிமுட[illegible]ருகிக்
கருணைஅப்துல்[illegible]சி-மிரத்தக்களையில்ம[illegible]கிநின்றார் (௧௨௯

வெட்டிமனமயங்கி-காசிமவர்-வீரமாய்நிற்கையிலே
[illegible]ட்டனுமறுவந்து-காசிமை-வெட்டினன்றுணிகரமாய் (௧௩௦)

வெட்டவலதுபுறம்-விழுந்துவெள்ளம்போல்ரத்தஞ்சிந்த
இட்டமுடன்காசி-மவனை-யெட்டியேவெட்டிவிட்டார் (௧௩௧)

காய[illegible]தில்லாத்தஞ்சிந்தி-உமறுகளத்தினிற்செத்திடவே
நாயனை[illegible]போற்றிசெய்து-காசிமவா-னமைநிலஞ்சாய்ந்தார் (௧௩௨)

தங்கம்போ[illegible]மேனியது-தளர்ந்து-தரையில்விழுந்ததுபோல்
அங்கமலிந்திருகிக்காசிம்-அல்லாவெனச்சாய்ந்தார் (௧௩௩)

மண்டலமும்புகழும்-சறுபலா-மண்ணின்மேல்காசிம்விழ
வண்[illegible]ர்நெருங்கமுடன்-வளைந்து-வந்தார்தலையறுக்க (௧௩௪)

கண்டுகுதிரையது-எழும்பிக்கனைத்தேயனுட்டனித்து
வண்ட[illegible]ணுகாமற்-சடித்து-வாசியுதைத்ததுவே (௧௩௫)

இட்ட நெருக்கிடாமற்-பின்னர்-இளமியனுமனித்தே
யெட்டிமுகம்பார்த்துக்-குதிரை-யேங்கியழுததுவே (௧௩௬)

தங்கமகன்காசிம்-விழுந்து-தரையிற்கிடக்கையிலே
சிங்கமெழுந்ததுபோலு-சைனூர்-தியங்கிக்கரைந்துகொண்டே (௧௩௭)

வந்தங்கெடுத்தணைத்துக்-காசிமை-வாரிமடியில்வைத்துச்
சிந்தைதடுமயங்கி-அல்லாவென்று-செப்பினரப்போது (௧௩௮)

எங்கள்குடிக்கரசே-மகனே-யிருப்பாயென்றெண்ணிருந்தேன்
தங்கமகனுரே-புன்றன்-றலையின்விதியிதுவோ (௧௩௯)

மன்னர்துயரமுறச்-சொர்க்க-மாதர்துயர்முற
ஜென்னத்திலேயிருக்கும்-வானோரெல்லாரு-சோரத்துயர்கொண்டார்()

வானமலைகடலு-மற்றுந்தவஸ்துகளும்புலப்ப
ஆனமகன்காசிமை-உசைனான்பாயெடுத்துவந்தார் (௧௪௧)

கண்டேயுசைன்மகளார்-காசிம்-காதலியிதுசொல்வார்
வண்டன்படையிற்செல்லவுத்தும்மை-வந்துபிடித்ததுவோ (௧௪௨)

தங்கப்பெண்மேனியிலே-வெட்டின்-றழும்புதனைப்பார்த்து
மனங்கலங்கி-அரசிமண்மேற்புரண்டழுதே (௧௪௩)

வாடிமிகச்சலித்துக்கன்னியர்-வல்லவனை நினைந்து
நாடிபகாட்டப்படி-நடத்திடுநாயனேபுனசெயலோ (௧௪௪)

கன்னிவயதெனக்குத்-தலையிற்-றன்விதிப்படியென்
றெண்ணியுசைனமகளா-ரிப்படிக்கேங்கிப்புலம்பலுற்றார் (௧௪௫)

சாந்து அழியவில்லைக்கல்யாணச்-சடங்குமுடியவில்லைக்
கூந்தல்தனையவிழ்த்தே-யிருவரும்-கூடிநீராடவில்லை (௧௪௬)

மங்கையென்றென்னுடனேயிருந்தே-மனதுமகிழ்கூர்ந்து
செங்கையழகுதனை நிதமுஞ்சிறப்பொடும்பார்க்கவில்லை (௧௪௭)

சிங்காசனந்தனிலே-தரித்துச்சிராயமுமிருந்தே
யுங்கள்மனங்குளிர-இருவரும்-ஒத்துமைபார்க்கவில்லை (௧௪௮)

பொன்னிறுற்பல்லாங்குழி-யதற்குட்-போட்டிமுத்துமணி
தன்னைவிளையாடி-யிருவர்-சமர்த்துமறியவில்லை (௧௪௯)

கோதிக்குழல்முடித்த-கஸ்தூரிக்கூந்தலவிழ்க்கவில்லைச்
சாதிமணமுடித்த-முல்லைமல்லிச்-சண்பகம்வாடவில்லை (௧௫௰)

கொண்டைசரியவில்லை-ரத்தினக்-கூந்தல்தளரவில்லைச்
செண்டுமணமுடித்த-மலர்மாலைச்-செண்பகம்வாடவில்லை (௧௫௧)

கூந்தலைவிழ்க்கவில்லை-தங்கக்-கொப்பிகழட்டவில்லை
வாரந்துமுடித்தபின்ன-லவிழ்த்ததை-மாறியேபின்னவில்லை (க௱உ)

ஜோட்டிபவிழ்க்கவில்லை-ரத்நச்-சுட்டிகழட்டவில்லை
வாட[illegible]ழுந்துமுல்லை-மலர்-வாச-மும்வாடவில்லை (க௱ங)

சாந்துகள[illegible]பன்னி[illegible]உயர்ந்த-சந்தனழியவில்லைச்
சோர்ந்திடாக்கூந்தல[illegible]-மெனக்குச்-சோருதேயென்னசெய்வேன் ( )

வாளிபிளவில்லை-தங்கமணிகள்-கழட்டவில்லைக்
கோலிவயிரமரத்ந-மதிற்செய்த-கொப்புங்கழட்டவில்லை (க௱ச)

ஒத்தைச்[illegible]ரியப்பிறை-கத்து-முயர்ந்தபதக்கமொடுன்
கொத்து[illegible]ரப்பளி-பின்மற்றும்பணி-கூடக்சழட்[illegible]வில்லை (க௱ரு)

பொட்டு[illegible]ளைபவில்லை-பல்லிற்காவி-போட்டது[illegible]றவில்லைப்
பட்[illegible]கனிவில்லை-வாயிற்போட்ட-பாக்குஞ்சி[illegible]க்கவில்லை (க௱சா)

மஞ்சள்முகத்திலிட்ட-அழகு-மண்டூமழியவி[illegible]லைக்
கஞ்சமா[illegible]கைக்கிடக்-மதனைக்-கழட்டியெடுக்க[illegible]வில்லை (க௱எ)

தாலிதன்றகோத்த-மஞ்சட்-சரடுந்தளரவில்[illegible]
மாலையும்வாஜிபந்து-மதைக்கோத்த-நாலும்[illegible]ழகவில்லை (க௱அ)

கையினிலிட்டரத்ந-வளையற்-கங்கணவிழ்[illegible]வில்லைத்
தையலிந்தப்படியே-புலம்பித-தன்னிலே[illegible]ன்சோர்ந்து (க௱கூ)

ஒண்டொடியாளிடையி-லிருந்த-ஒட்யாண[illegible]ப்பட்டயமும்
அன்றுமெலிந்தனு-லிடையி-லதுவுந்தளர்ந்ததுவே (க௱௰)

பாதத்திலிட்டரத்ந-தங்கப்-பாடகமுஞ்சிலம்பும்
வேதனையாலுருகிச்சிலம்பு-மெலிந்துதளர்ந்ததுவே (க௱௰க)

இ[illegible]தப்படியெனக்கே-புவப்பா-யிருந்திட்டமன்னவரே
எந்தவிதத்தாலே-மனதி-லெளியாளபொறுப்பனென்றார் (க௱௰உ)

தா[illegible]ர்மனமுருகிச்-சரீரத்தழும்புதனைப்பார்த்து
மாயல[illegible]ையாயின்று-முடிவுநாள்-வந்ததோவென்மகனே (க௱௰ங)

இத்தனை[illegible]ர்வளைக்கும்-புலிபோல்-வளர்த்தனேயென்மகனே
[illegible]ழ்ந்திடவே-வென்முகத்தைச்-சேமமாய்ப்பாரீரோ (க௱௰ச)

இத்தனைபாராட்டிச்-சொலிக்கெஞ்ச-வேந்தலப்துல்காசிஞ்
சித்தமதிலிரங்கிச்-சிறந்த-கண்ணினைத்தான்திறந்தே (க௱௰ரு)

முன்றுஜைஹனர்-முகமும்-மாதாமனைவிமுகப்பார்த்துச்
சொ[illegible]னபமாருங்காசிம்- துன்யாவிட்டுச்-சொர்க்கமேபோய்ச்சேர்ந்தார்

உற

மன்னருக்சொரப்போ-தம்-மகளார்முகம்பார்த்து
என்னசெய்வோமகளே-தலையிலே-தனைப்பிறவே (௧௬௬)

இத்தனைநாளிருந்து-மகளே-யின்றுமணமுடித்தேன்
பத்தானவநீபிரிய-மகளே-படைத்தோன்விதியிதுவோ (௧௬௭)

இப்படியேமொழிய-மகளார்-இறையோனிடந்தனில்ல
எப்படிநீசெய்தாலு-மெனக்கு-இதுலேசுக்கூறதெனாறூர் (௧௬௮)

கட்டினதாலியதை-யறுத்துக்-கழட்டியேபோடவுந்தான்
முட்டியேதுக்கத்துடன்-கண்ணீர்-முத்தினைப்போலுதிர்த்தார் (௧௬௯)

என்னுடனொத்தபெண்கள்-முகத்திலினிலெப்படிநான்முழிப்பேன்
சின்னஞ்சிறுவயதிற்றனியிற்-சிந்திக்கவெழுதினனே (௧௭௰)

வாழ்கிறபெண்களுடன்-சேர்ந்து-வளமாய்விளையாடத்
தாழுமோவென்சரீரம்-பொறுத்துத்-தரிக்குமோவென்மனது (௧௭௧)

கொட்டுங்கலியாணப்-பெண்களின்-கூட்டத்திலினிப்போக
இட்டமாயென்மனது-போகவர-வர்ககுமோவென்னசெய்வேன் (௧௭௨)

...ப்பூபறித்து-விளையாடும்-கன்னியர்தன்னுடனே
வேடிவிளையாடிப்போகவ...-மெலியுமேயென்மனது (௧௭௩)

பட்டினுடையுடுத்திச்-சிங்...த்த-பண்புள்ளபெண்களுடன்
இட்டமுடன்கூடி-யுவந்து-இருப்பதற்கென்னசெய்வேன் (௧௭௪)

என்னுடனீர்பேசி-யெந்நாளு-மிருந்துமகிழாத
மன்னரோறுஞ்செஞ்சை-கபுறின-மண்ணுமேநீண்டிடுமோ (௧௭௫)

என்னைவிட்டுப்பிரிந்தீரரசே-யெப்படிநானிருப்பேன்
மன்னரோநானுங்கூட-அங்கன்வர-வல்லோனுதவிசெய்வான் (௧௭௬)

ஆதிபெரியவனே-யெவ்வஸ்தையும் ஆளுப்றகுமானே
நீதிமணாளருடனும்போக-நித்தனேயுத்விசெய்வாய் (௧௭௭)

எழுவயதெனக்குத்துனியா-வெப்படியோவறியேன்
வாழும்வயதுவந்தாற்-சரீரம்-வாடிமெலிந்திடுமே (௧௭௮)

இன்னஞ்சிலகாலந்-தனியே-யிருந்துவருந்தாமல்
மன்னவர்தன்னுடனே-கூடப்போக-வல்லோயுதவிசெய்வாய் (௧௭௯)

ஆண்டவனேகனியே-சிறியா-ளழுதுசலியாமல்
மாண்டவர்கூடஇப்போ-போக-வல்லோயுதவிசெய்வாய் (௧௮௰)

தங்கமுடிசூடும்-அரசர்-தனியாயிருப்பாரோ
அங்கேயவர்தமக்குப்-பணிவிடை-யார்செய்யப்போறூர்கள் (௧௮௧)

தன்னைத்தெரியாமற் புலம்பித்-தாயிற்சுழன்றுவிழ
மன்றலுசைனார் [illegible]த்-தாங்கியே-மாமியெடுத்தணைத்தார் (கஅஉ)

மாமியெ[illegible]த்தணைத்துத்-தங்கள்-மார்போடே-தான்சேர்த்துப்
பூமயிலே மணியே-யுனக்குப்-பொருந்தா மணமுடித்தேன் (கஅங)

ஆசைமருமகனே-அரியமுள்ள-அரசியேநாயகியே
கூசிடுதேபார்க்க-அகங்-கொதிக்குதேயென்னசெய்வேன் (கஅச)

வாடிமயங்கின்றதே-சரீரம்-வருந்தித்திடிக்கின்றதே
ஆடிப்பறக்கின்றதே-எனக்கு-அருமைமருமகளே (கஅரு)

சப்பிரமஞ்சத்தினி-லிருபேருஞ்-சார்ந்தேயிருக்காமல்
இப்படியுன்னைவிட்டு-மகனார்-எப்படிப்போயினரோ (கஅசு)

அன்னமொழிக்குயிலே-யுன்றன்-ஆசையும்பாராமல்
உன்னைப்பிரிந்திடவோ-மண-முழுவந்துமுடித்தோமோ (கஅஎ)

இப்படியேமயங்கி-யெல்லோருமேங்கித் துடிதுடித்து
எப்படியானாலு-மிறைவனெங்களைக்காத்திடுவாய் (கஅஅ)

என்றுசுக்கூறுசெய்து-காசிமை-யெடுத்துக்-கபன்சூட்டி
வென்றியுடன்றொழுது-அவ்விடம்-வேங்கையடக்கஞ்செய்தார் (கஅகூ)

ஒ தா ங் க ம்.

நல்லமணத்துடன் காசிம்தன்னை நயந்துகபன்சூடித் தான்றொழுதே, யெல்லவருமொன்று யடக்கஞ்செய்தே யிறையோனளவிலே சுக்கூறுஞ்செய்து, அல்லலுடன் பன்னீர்த் தவனத்துடனரிவையோ ரழவுசைனார்சொன்னார், வல்லநாயகன்செயல்தனக்கு வாக்குமனமொத்தேயிருக்க வேண்டும். (ககூ௰)

முன்னுள்ளநபிமார்களுக்குமுழுதம்பெரியவரவர்களுக்கும், தன்னிகரில்லாத்துய்யநாயனறந்தான்பலபலவிசனங்களை, யுன்னிக்கலங்காமலவர்களெல்லா மூடையோனளவினில் சுக்கூறுசெய்தார, கன்னிமார்க ளே[illegible]ப்படிக்குக் கருத்துள்மகிழ்வாகசுக்கூறுசெய்வீர். (ககூக)

[illegible]றையவன்சிதம்விதமா யவனிதனிலுள்ளமாந்தருக்கும், வேதனைப்[illegible]விடுவதெல்லாம் விளங்குஞ்சுவர்க்கத்திள்வாழ்வதாகும், வது[illegible]மாலேமுடியாதென்றேபிறகுல் பேரனாரவர்களுக்கு, வோதினார்பல விதவிதமா யொசிய்யத்துச்செய்தார்சுக்கூறுசெய்ய. (ககூஉ)

மன்னப்துல்காசிமிறந்ததற்கு மற்றும்அஸ்ஹாபிகளிறந்ததற்கும்,இன்னம்பலபேர்களிறந்ததற்குமிலங்கும் அலியக்குபறுதமக்கும்,பொன்னின் மணிவாயாலொசிய்யத்ததைப்போதித்தார் நபிதிருப்பேரனார்,கன்னிமார்[illegible]ங்கேட்டுவந்து கத்தனேயுன்றன் காவலென்றார். (ககூங)

நீதிநீங்கிலாநவமணியாய் நீண்டபுவியுள்ளோர்க்க ரசீரய்நின்ற ஆதியொளிவினிலவதரித்தே யறுசில்கபுசோடேயேகிநீண்ட, வேதநபியு ல்லாகாலந்தனில் விளம்புஞ் ஜயமான செய்திகேளீர், பூதலந்தனிலென க்குப்பின்னர் புகலும்பாதகஞ்செய்வாரொன்றும். (௧௯௪)

அந்தமொழிப்படி நமக்காயிற்றுஅச்சப்படவேண்டாமென்றுசொல்லுநர், இந்தத்துனியாவில் வெகுகாலமா யிருந்தாற் பினுமவுத்தாகவேண்டு, எந் தவீரரும்நிலைநில்லாம லெல்லாமடங்கினர்மண்ணுக்குள்ளே, புந்திமகிழ் வாகவிறையோன்பக்கற் புகலும்சபூறஞ்தச்செய்துகொள்ளுங் (௧௯௫)

பாதகம்நம்மைச்செய்தவர்கள் பகருகின்றகியாமத்திளில், வேதனை மிகப்படுவதுண்டும்வெற்றிசுவர்க்கத்திலினாமிருப்போம், எதுநினைத்தி டவொண்ணுதென்றே எங்கண் முஹம்மதுதிருப்போனர், ஓதிப்பலப லவிதமாகவே வொசிய்யத்துச்செய்தாரங்கேமே. (௧௯௬)

கண்ணிகள்.

இந்தப்படியாக-வொசிய்யத்தி-தியம்பியுசைனுருஞ்
சிந்தைமகிழ்வாக-வெல்லோருஞ்-சேர்ந்துசுக்கூறுசெய்தார் (௧௯௭)

எனவினைவந்தாலு-மிவர்களிறையோனிடமாக
இன்னுலில்லாதியென்றே-யேகறி-யிருந்தார்கறுபலாவில் (௧௯௮)

சொர்க்கநகர்க்கரசாய்த்-துனியாவிற்-றுன்பந்தனைநீக்கு
மக்கநபிபோ-ருசைனுர்-வரிப்புலிபோலிருந்தார். (௧௯௯)

ஆதியின்கற்பனைக்கு சபூருய்-அல்லாவுநானென்றே
சோதிமதிபோலங்-குசைனுர்-சுகமாகவீற்றிருந்தார் (௨௦௦)

இந்தமட்டுஞ்செய்த-காசிம்-எழிலார்படைப்போரை
அந்தமுடன்பாடி-முடித்தேன்-அல்லாவுதவியினுல் (௨௦௧)

ஆதியுவப்பாருங்காசிம்-படைப்போ-ரவனியிலேவாழி
பூதலமீதிலுறும்-மாந்தர்கள்-புகழுடனேவாழி (௨௦௨)

தேசமெல்லாம்வாழி-காசிமெனுஞ்-செம்மலுமேவாழி
பாசமொடும்படித்தோர்-கேட்போரும்-பாங்குடனேவாழி (௨௦௩)

காசிம்படைப்போர்-முற்றுப்பெற்றது.

1313